Tiaano™
Innovation in Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2000 Company

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 2278 1148 Fax: 2278 1362 Email: info@tianode.com Web: www.tianode.com

# INTER - ORGANIZATIONAL NEWSLETTER – MAY 2008

## FORECASTING 08-09

| | |
|---|---|
| Turnover | : 165% ↑ |
| Employment | : More on Automation |
| Profitability | : 100% ↑ |
| Rejection Rate | : 100% ↓ |

## TESTIMONIALS

**Customers:**

| | |
|---|---|
| Up to **Mar** 08 | : 284 Nos |
| Up to Apr 08 | : 287 Nos |

**Performance: APR 2008**

| | |
|---|---|
| Turnover growth | : 1.21 % |
| Employment growth | : 3.6 % ↑ |
| 100% Attendance | : 17.8 % |

## MANAGEMENT

| | |
|---|---|
| Ms. P.E. Nancy | : Director |
| Mrs. J. Vanajambika | : Director |

## KEY PERSONS

| | |
|---|---|
| Mr. M.P.V. Jeyakumar | : CEO. |
| Mr. RS. Thangappan | : GM. |
| Mr. T. Amaladhas | : Plating. |
| Mr. T. Ramesh | : Stores. |
| Mr. C. Babu | : Finance. |
| Mr. RM. Ravichandran | : Marketing. |
| Mr. T. Suyamburaja | : Purchase |
| Mr. N. Murugan | : Planning. |
| Mr. M. Suyambu | : Production. |
| Mr. R.Ramesh | : QA. |
| Mr.C. Sounder suresh | : Outsourcing |

## ACHIEVEMENT




## நம்பிக்கையுடன் வாழ்வோம்

மனிதர்களுக்கு உண்டாகும் நோய்களில் மிகவும் கொடியது சந்தேகம். அது ஒருவரது வாழ்க்கையை எளிதில் கெடுத்து விடுகிறது. நட்பாக பழகும் இருவர் கூட்டாக சேர்ந்து தொழில் செய்யும் போது, பணத்தைக் கையாள்வது தொடர்பாக சந்தேகம் வந்து விட்டால், அவர்களது நட்பே முறிந்துவிடும் அளவிற்கு சண்டை வந்துவிடும். இதுபோல, கணவன், மனைவி திருமணமானதில் இருந்து நல்ல அன்புடனும், விட்டுக்கொடுத்தும் சிறப்பான வாழ்க்கை வாழ்வர். ஆனால், இவர்களில் யாராவது ஒருவருக்கு சந்தேகம் வரும்போது, அவர்கள் பிரிந்து விடுகின்றனர். அத்துடன் அவர்களது தலைமுறையம் முடிந்து விடுகிறது.

இதுமட்டுமில்லாமல். சில சமயங்களில் கடவுள் மீதே சிலருக்கு சந்தேகம் வருகிறது. இதற்கு நம்பிக்கை இல்லாமையே அடிப்படையாக இருக்கிறது. ஆகவே, சந்தேகத்தை விடுத்து நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். கடவுளிடம் நம்பிக்கை வைத்து அவரை வணங்க வேண்டும். வாழ்க்கையே நம்பிக்கை என்ற சக்கரத்தை மையப்படுத்தி தான் சுழல்கிறது. அச்சக்கரத்தின் ஒரு அச்சு முறிந்தாலும், வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும். ஆகவே, சந்தேகம் விடுத்து நம்பிக்கையான வாழ்க்கை வாழுங்கள்.

இதையே பைபிள், “நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமாயிருங்கள்” என்கிறது. இவ்வசனத்தின்படி கடவுளிடமும், சக மனிதர்களிடமும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வோம்.

தொகுத்தளித்தவர்
செல்வி. பி.இ. நான்சி – Direcor.

## இளைஞனே சாதிக்க திட்டமிடு

இன்றைய உலக வாழ்க்கை என்பது கற்பாறைகளும், குன்றுகளும், குறுக்கிடும் காட்டாறு போன்றது. அதில் தான் நமது வாழ்க்கை என்ற படகைச் செலுத்தியாக வேண்டும். அதை செலுத்திட துடுப்புகளைத் துடிப்புடன் போட இளைய பருவம்தான் ஏற்றது.

அனுபவம் தான் வாழ்க்கை. அதில் வெற்றி தோல்வி சகஜம். தோல்விகளைக் கண்டு மனம் நொடியாமல், அதுதான் வெற்றியின் முதல்படி என்று உணர்ந்து தன்னம்பிக்கை, மன உறுதி, உழைப்பு, விடாமுயற்சியுடன் போராட தயாராக வேண்டும்.

ஆக்க பூர்வமான மனோபாவம் என்பது நமக்கு நாமே கொடுத்துக் கொள்ளக் கூடிய மிகப் பெரிய பரிசாகும். இப்படிப்பட்ட மனோபாவம் உள்ளவரின் மூளையில் முடியும் என்ற வெற்றிகரமான சிந்தனை தான் முழுவதும் நிரம்பியிருக்கும். தோல்வி சிந்தனைகளுக்கு அங்கே ஓர் அறையிலும் இடம் இருக்காது.

வானத்தில் பறக்கும் பறவைகளின் சுவடுகள் வானத்தில் பதிவதில்லை. அது போல நீ வாழாமல் உனக்கு பின்னும் உலகில் உன் சுவடுகளை பதியும் வகையில் பரிணாம வளர்ச்சி பெறும் வகையில் வாழ திட்டமிடு. இன்றே அதை உன்னுடைய இலட்சியமாக்கு.

உன்னுடைய சிந்தனைகளே சொல்லுக்கு அடிப்படை, சொல்லே செயலுக்கு அடிப்படை. ஆகவே வாழ்க்கையில் வளம் பெற தெளிவான, முன்னேறும் வகையில் நற்சிந்தனைகளை ஒதுக்கிடு.

## மனிதன்

இளைஞனே!
சிலந்தியாய் இரு
அதற்காக
சிறைபடாதே!
களவும் கற்றுமற
அதற்காக
கொலைகாரனாகாதே!
நல்லவற்றைத் தேடு
தீமைகளைக் களையெடு!
மொத்தத்தில் – மனிதனாயிரு!

நமது நம்பிக்கை என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

## ஹைக்கூ கவிதைகள்

**தாய்**

தாய்க்காகக் காத்திருக்கிறேன்
மரத்தில் சாய்ந்தபடி

**மழை**

மழைவிட்ட நேரம்
தேங்கிய நீரில் முகம்
பார்த்தது தெருவிளக்கு

**விதி**

எத்தனை பேர் கூடி இழுத்தென்ன
இன்னும் வரவில்லை
சேரிக்கு தேர்!

**உயர்வு**

வியர்வை விதைத்து வித்துக்களை
அறுவடை செய்வான்
விவசாயி

**மண்**

அகதி முகாம்
மழையில் வருகிறது
மண் மனம்

**நம்பிக்கை**

இன்றே...
நம்பிக்கை புயல்
நமக்குள் நிலை கொண்டால்
நாளையென்ன நாளை
இன்றே நமதுதான்!

சிந்தனைப் புயலின் சிக்கித்
தவிப்போம்
சீக்கிரமே சிகரம் தொடுவோம்!
தோல்விகளைத்
துாண்டிலாக்கினால்
வெற்றி மீன்களை விரைவில்
பிடித்திடலாம்!

படித்து ரசித்தவர்
டி.கிங்ஸ்டன் – liaison

நீர் வீழ்ச்சியாய்க் கொட்டும் நீரை ஒழுங்குபடுத்தும் போது உயர்மின் சக்தியாக மாறுவது போல உங்களின் உணர்ச்சிகளையும், சக்திகளையும் ஒருமுகப்படுத்தினால் எதிர்கால கேள்விக்கு இடம் இருக்காது. எதிர்கால பயமும் அகலும் என்பது உறுதி.

நாம் வாழும் காலம் குறுகியது. நாம் வாழ்வதும் ஒரு முறையே அதை நன்கு உணர்ந்து மலர் போன்ற இளம் பருவத்தை நம் வாழ்நாள் முழுவதும் வாடாமல் பயனுள்ளதாக மாற்றி பலனடைவோம்.

உன் எதிர் கால வாழ்க்கையின் இலட்சியத்திற்கு இன்றே திட்டமிடு. அதற்காக நாளும் பாடுபடு, ஓய்வின்றி உழைத்திடு. பலமே வாழ்வு, பலத்தை பெருக்கு சபலத்தை நீக்கு. பலமே உன்னுடைய துன்பத்தை நீக்கும் மருந்து.

உண்மை, நம்பிக்கை, நாணயம், விடாமுயற்ச்சி, உழைப்பு இவைகளை கருத்தில் கொண்டு கடமை உணர்வுடன் செயல்படு. வெறும் கை என்பது மூடத்தனம். பத்துவிரல்களும் மூலதனம். சுகிப்புத் தன்மை, சகோதரத்துவம், பொறுமை, நிதானம், துணிவு, அன்பு, அறிவு, வேகம், விவேகம், திட உறுதி போன்ற மூலதனங்களை கொண்டு உன்னிடம் உள்ளதை பெருக்கி பொறுப்புணர்ச்சியுடன் செயல்படு.

ஆரோக்கியமான உடல், சஞ்சலமற்ற மனம், துாய எண்ணங்கள் கொண்ட இதயம், தன்னம்பிக்கையுடன் பேணு. சாதிக்க திட்டமிடு! சலிப்பின்றி முயன்றிடு!

இளம் பருவத்தை வெறுமனே கழித்துவிட்டு முதிய பருவத்தில் உடல் வலிமை குறைந்து உள்ள வலிமையும் இழந்த காலத்தில், வாழ்க்கைப் படகை துரிதமாக இயக்க முடியாமல் அது இடர்ப்படும் பாறைகளில் மோதி சிதைய நேரிடும். கரை சேர முடியாமல் கவலைக்குள்ளாகும்.

குருகுலத் தென்றல் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

.

## சாதனை படைத்தோரின் வாழ்க்கை குறிப்புகள்



**பெயர்** : சத்திஷ் தவான்
**பிறப்பு** : 25.09.1920
**இறப்பு** : 03.01.2002
**இடம்** : ஸ்ரீநகர்

இவர் **ISRO** (Indian Space Research Organisation) என்னும் நிறுவனத்தில் Chairman – ஆக 1972 முதல் 1995 வரை பணியாற்றியுள்ளார். Indian Institute of Science (Bangalore) என்னும் நிறுவனத்தில் 1951–ம் ஆண்டு Senior Officer ஆகவும், 1962–ல் டைரக்டராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் இவர் 1981–ல் பத்மபூஷன் மற்றும் 1999–ல் இந்திராகாந்தி விருதும் பெற்றுள்ளார். இவர் தனது பட்டபடிப்பை பஞ்சாப்பிலும் தனது முதுகலை படிப்பை கலிபோர்னியாவிலும் முடித்துள்ளார் மற்றும் முன்னாள் ஜனாதிபதி Dr. அப்துல்கலாம் தனது குருவாக இவரைத்தான் மனதில் கொண்டுள்ளார்.

2002–ல் இவரது மறைவிற்க்குப்பின் ஸ்ரீஹரிகோட்டாவில் SHAR (Sriharikota Launching Range) என்னும் பெயரில் இருந்த ISRO நிறுவனம் SDSC Satish Dhawan Space Center என்ற பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தொகுத்தளித்தவர்
ஜி.கல்யாண்குமார்.

சிறுகதைகள் பணியாளர்கள்
மற்றும்
குடும்பத்தினரிடமிருந்து
வரவேற்கப்படுகிறது.
**– Editor**

## Did You Know?

### Health Tip

- Drinking only bottled, purified or distilled water will dramatically reduce your intake of chemicals and heavy metals.
- Fish is an excellent food, filled with nutrients, but unfortunately, they suffer from body pollution too and can be a source of heavy metals – limit consumption to no more than twice a week.
- Olive and canola oil are the best choices for cooking oils because they contain the highest levels of polyunsaturated fats – the healthiest fats.
- Men and women over the age of 50 should avoid excessive levels of iron in their supplement. Look for a multi-vitamin & mineral supplement with less than 5 mg of iron.
- When buying a vitamin E supplement, check the label carefully and look for the natural source d- form avoid the synthetic dl- form.

### Take Action Today

- Do your part in protecting the environment by recycling as much as possible.
- Become aware of what you put in your body – ask yourself "is this contributing to body pollution"?
- Realize that being healthy and active well into old age is a reality and that illness and disease don't have to be a part of living.
- Reduce your use of chemicals around the home – common sources include lawn and garden chemicals and home cleaning products.

The above matters has taken from Fighting Body Pollution magazine

## மஞ்சள் காமாலை ஏற்படுவது ஏன்?

மஞ்சள் காமாலை என்பது நோயின் அறிகுறியே. அதுவே ஒரு நோய் அல்ல. காமாலையை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து உரிய சிகிச்சை எடுத்துக் கொண்டால் குணமடையலாம்.

வயதான சிவப்பு அணுக்கள் மண்ணீரலில் அழிக்கப்படும்போது பிலிரூபின் என்ற மஞ்சள் நிறப்பொருள் உடலில் உற்பத்தி ஆகிறது. ரத்தத்தின் வழியே கல்லீரலை அடையும் பிலிரூபின், பித்த நீர் மூலமாக மலம், சிறுநீர் வழியாக வெளியேறுகிறது. கல்லீரல் பாதிக்கப்பட்டாலோ பித்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டாலே கழிவுப் பொருளான பிலிரூபின் உடலிலேயே தங்கி விடுகிறது. இதன் காரணமாகவே உடலில் மஞ்சள் நிறம் ஏற்படுகிறது. மது அருந்துவதாலும் ஹெபடைடிஸ் கிருமிகள் கல்லீரலைத் தாக்குவதாலும் மஞ்சள் காமாலை நோய் ஏற்படுகிறது.

மஞ்சள் காமாலையின் அறிகுறிகள்
வாந்தி, குமட்டல், உடல் சோர்வு, வயிற்றின் வலது பக்க மேல் பாகத்தில் வலி, மூட்டு வலி, வயிறு வீக்கம், காய்ச்சல், ரத்தக் கசிவு ஆகியன மஞ்சள் காமலையின் அறிகுறிகளாகும். நாளாக, நாளாக சிறுநீர் மஞ்சளாக போகும். கண்ணின் வெள்ளைப் படலத்திலும் நாக்கின் அடிப்பகுதியிலும் மஞ்சள் இருக்கும். நோயாளி உடல் மெலிந்து காணப்படுவார்.

மஞ்சள் காமாலை: 2 வகைகள்

அடைப்புக் காமாலை, அடைப்பில்லா காமாலை என இரண்டு வகை மஞ்சள் காமாலை உள்ளது. அடைப்புக் காமாலை என்பது கணையக் கோளாறு, பித்தக் குழாய் கற்கள், பித்தக்குழாய் புற்றுநோய் ஆகியவற்றால் ஏற்படுகிறது.

அடைப்பில்லா காமாஷைற ஏ, பி, சி, டி, ஜி, இ ஆகிய வைரஸ் கிருமிகள், மதுபானம், பாக்டீரியாக்கள் (டைபாய்டு காய்ச்சல்), ஒட்டுண்ணிகள் (மலோரியா), சில வகை மருந்துகள்.

அடைப்புக் காமாலை, அடைப்பில்லா காமாலை ஆகிய இரண்டு காமாலைக்கும் சிகிச்சை முறை வேறுபடும். எனவே ஒருவருக்கு வந்துள்ளது எந்த வகையான காமாலை என்பதை அறிந்து அதன் பிறகே சிகிச்சை அளிக்க வேண்டும்.

வயிற்றின் மேல் பாகத்தில் அதிக வலி, கடும் காய்ச்சல் ஆகியவை அடைப்புக் காமாலைக்கான அறிகுறிகள்.
மஞ்கள் காமாலை: சோதனைகள் என்ன?
ரத்தப் பரிசோதனை மற்றும் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மூலமாக இரண்டு வகையான மஞ்சள் காமாலைகளையும் வேறுபடுத்த முடியும். பொதுவாக பிலிரூபினின் அளவை மட்டும் ரத்தத்தில் பார்த்தால் போதும் என நினைக்கின்றனர். இது தவிற பிலிரூபின் அளவு மட்டுமின்றி கல்லீரலின் வேலை செய்யும் திறனையும் அறிய வேண்டும். இதற்கு Liver Function Test என்று பெயர். புரத அளவு நொதிகளின் அளவு போன்ற இதர ரத்தப் பரிசோதனைகளையும் செய்ய வேண்டும்.
மஞ்சள் காமாலை: சிகிச்சை என்ன?

அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மூலமாக பித்தக் குழாயில் உள்ள கட்டிகள், கற்கள் போன்றவற்றை துல்லியமாகக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க முடியும். எந்த வகை மஞ்சள் காமாலை என்பதை அறியாமல் கீழாநெல்லி போன்ற மருந்துகளை சுயமாகச் சாப்பிட்டு நோய் முற்றிய பின்னர் மருத்துவமனைக்கு வருவதால் சிகிச்சை பலனில்லாமல் போகிறது.

## FUNCTIONAL WISHES



**FLAG DAY JUNE 14**
**FATHERS DAY JUNE 15**
**Best Wishes by Tiaano Employees.**

## EXTERNAL SUPPORT

Banking : M/s. UCO Bank
Auditing : M/s. Nisar & Kumar
AQ Auditing : M/s. Juran Quality
Legal Adviser : Lr. M.K. Govindan
: Lr. Vincent
Central Excise : Mr. Raghavan
Health Care : M/s. Bethesda Hospital

## BIRTH DAY WISHES



| | |
|---|---|
| **Mr. S. Samuvel** Driver | Jun 03 |
| **Master Adhavan Kumar** S/o. M.P.V. Jeyakumar (CEO) | Jun 04 |
| **Mr. A.Rathinam** Production-Dept | Jun 04 |
| **Mr. M. Suyambu** Manager-Production | Jun 05 |
| **Mr. K.Kanthan** Store-Dept | Jun 05 |
| **Mr. V.Satheesh** Production-Dept | Jun 05 |
| **Mrs. M.Chandrakala** W/o. N. Murugan (Manager-Planning) | Jun 07 |
| **Mrs. V. Rajakumari** Coating-Dept | Jun 07 |
| **Mr. SriGanesh** Production-Dept | Jun 08 |
| **Mr. P. Sathish** Production-Dept | Jun 08 |
| **Mr. A. Sekar** Production-Dept | Jun 09 |
| **Mrs. R. Lathakumari** W/o. T. Ramesh (Manager-Store) | Jun 10 |
| **Mr. C. Babu** Manager-Finance | Jun 10 |
| **Mr.J.Shanmuga Sundaram** H/o. S. Sasirekha ( Marketing ) | Jun 13 |
| **Mrs. T. Jayalatha** Finance-Dept | Jun 15 |
| **Mr. P. Sowrirajan** F/o. S. Arokyaraj ( Production) | Jun 20 |
| **Mr. G. Jeevanantham** Coating-Dept | Jun 20 |
| **Mr. S. Arokyaraj** Production-Dept | Jun 21 |
| **Mr. T. Rajakumaran** Coating-Dept | Jun 22 |
| **Mr. P. Gopalakrishnan** Production-Dept | Jun 26 |
| **Mrs. I. Priya** W/o.G.S. Mohan kumar (Production) | Jun 30 |
| **Miss K.Sathya** Marketing - Dept | Jun 30 |

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

**Best Wishes by Tiaano Employees.**

## அடைப்புக் காமாலைக்கான சிகிச்சை:

எண்டோஸ்கோப்பி மூலமாகவோ அல்லது அறுவைச் சிகிச்சை மூலமாகவோ அடைப்புக் காமாலையை முழுமையாக குணப்படுத்த வாய்ப்புள்ளது.

பித்தக் குழாய் கற்களினால் ஏற்படும் காமாலையை சரி செய்ய முன்பு அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டது. ஆனால் இப்போது எண்டோஸ்கோப்பி மூலம் ஈஆர்சிபி என்ற அதிநவீன சிகிச்சை முறையில் அறுவைச் சிகிச்சை செய்யாமலேயே கல்லை எடுத்து விடலாம்.

புற்று நோயினால் பித்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டால் ஸ்டென்ட் எனப்படும் செயற்கைக் குழாயை எண்டோஸ்கோப்பி கருவி மூலம் பித்தக் குழாய் உள்ளே பொருத்தி குழாய் சுருக்கத்தை நீக்கி மஞ்சள் காமாலையை குறைக்கலாம்.

அடைப்பில்லா காமாலைக்கான சிகிச்சை முறை ஹ அடைப்பில்லா காமாலையை சத்து மருந்துகள், வைரஸை அழிக்கும் மருந்துகள் மூலம் குணப்படுத்தலாம்.

வைரஸ் கிருமிகளால் கல்லீரல் பாதிக்கப்பட்டு காமாலை வந்தவர்களும் சிகிச்சை அளிக்க பலதரப்பட்ட நவீன மருந்துகள் உள்ளன. அதாவது வைரஸ் எதிர்ப்பு (ஆன்ட்டி வைரஸ்) மருந்துகள் உள்ளன. பழுதடைந்த கல்லீரலை சரிசெய்ய மருந்துகள் உள்ளன. கல்லீரலை பாதுகாக்க வைட்டமின்கள், மாவுச்சத்து அதிகமாக தருவதால் விரைவில் குணமடைய வாய்ப்புள்ளது.

மலேரியா, டைபாய்டு காய்ச்சலால் கல்லீரல் பாதிக்கப்பட்டு காமாலை நோய்க்கு உரிய மருந்து வகைகள் உள்ளன. மது குடிப்பவர்கள் எந்த நிலையில் வந்தாலும் குணப்படுத்த முடியும்.

மஞ்சள் காமாலை சிகிச்சை என்ன?

அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மூலமாக பித்தக் குழாயில் உள்ள கட்டிகள், கற்கள் போன்றவற்றை துல்லியமாகக் கண்டறிந்து சிகிச்சை அளிக்க முடியும். எந்த வகை மஞ்சள் காமாலை என்பதை அறியாமல் கீழாநெல்லி போன்ற மருந்துகளை சுயமாகச் சாப்பிட்டு நோய் முற்றிய பின்னர் மருத்துவமனைக்கு வருவதால் சிகிச்சை பலனில்லாமல் போகிறது.

மருத்துவ மலரிலிருந்து தொகுக்கப்பட்டது.

**Our Director has participated as chief guest in the 9th Anniversary of Sivanthi Athithanar Woman's Higher Secondary school - Ponneri**

